நாள்- 22.09.2023

Case No.OS.39/2017 (DW2 Cross)

DW.2- விஜயன் – வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு தாக்கல் செய்த கண்ணன் என்னுடைய சித்தப்பா . எந்த வழக்கு சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் அதன் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் சர்வேஎண். 480/10, 480/15 இருசர்வே எண்ணிற்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனக்கு எழுதபடிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 அந்த சர்வே எண்ணிற்கு உரிய பட்டா என்றால் சரிதான். என் தாத்தா பட்டாவின் கந்தசாமி கவுண்டர் மக்கள் 1) துரை, 2)கண்ணன் ஆகியோர்கள் பெயரில் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள துரை என் அப்பா அவர்தான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் உள்ள கண்ணன் தான் இந்த வழக்கின் வாதி என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் சொத்து குறித்து என் அப்பா துரைக்கும், வாதி கண்ணனுக்கும் பாகம் ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் என் தரப்பில் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை பத்திரம் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வா.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன்படி வாதியும், 1ம் பிரதிவாதியும் மட்டும்தான் உரிமையாளர்கள் என்று சொன்னால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தில் வராத சொத்துக்களில் பாகம் கேட்கமுடியாது என்று சொன்னால் சரிதான். என் அப்பாவுக்கு முழு உரிமையில்லாத ஆவணத்தை பொறுத்து சொத்து எழுதி வைத்தால் அது தவறு என்று சொன்னால் சரிதான்.

மறுவிசாரணை– இல்லை.